1978 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

எனக்கு ஒத்துழைப்புத் தருவதைப் பொறுத்திருக்கிறது, கேள்விகளை எடுத்துக்கொள்வதும் பதில் அளிப்பதும். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் என்னோடு ஒத்துழையுங்கள், எல்லாக் கேள்விகளுக்கும் இங்கே பதிலளிக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தினந்தோறும் கேள்வி நேரத்தில் முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்குத்தான் பதில் சொல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது; கடைசியில் இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அவர்கள் பதில் சொல்ல நேரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளுக்குத் துணை வினா கேட்டு விளக்கம் பெற எங்களுக்கு வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. அதனால் இப்போது இருக்கிற முறையை மாற்றி, ஒருநாள் விட்டு ஒருநாள் கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளை முதலில் எடுத்துக் கொண்டு, தகுந்த விளக்கங்களைப் பெற எங்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய யோசனை நல்லதுதான், ஒருமுறை இங்கிருந்து பதில் சொல்வது, ஒருமுறை அங்கிருந்து பதில் சொல்வது என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்; இனி அப்படியே செய்கிறேன்.

(3) தகவல் கோரல்:

(அ) அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் தரப்பட வேண்டுமென்று சொல்லப் பெறுவது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, உங்கள் மூலம் இந்த அரசிடம் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று மத்திய அரசு உறுதி அளித்திருப்பதாக இந்த அவையிலே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவலை பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன்ஃபினான்ஷியல் ரிப்போர்ட் இந்தியில்தான் தரப்பட வேண்டும். அப்படி இந்தியில் தரப்படாவிட்டால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாது என்று ஏதாவது உத்தரவு வந்திருக்கிறதா? அந்த உத்தரவின் விவரங்கள்

இந்தச் சபையில் வைக்கப்படுமா? இந்தியை எதிர்க்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? உரிய நடவடிக்கை எடுப்போம் என்று ஒரே வரியில் பதில் சொல்லாமல் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கிளப்பிய பிரச்சினை அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் அறிக்கை இந்தியில் வந்தால்தான் அதுபற்றி பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு, தமிழக அரசுக்கு அதுபற்றி தகவல் வந்திருக்கிறதா என்று கேட்டார்கள். பத்திரிகையிலே கூட நான் செய்தியைப் பார்த்தேன். கேரளாவில் இப்படிப்பட்ட ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்கு எதுவும் இதுவரை அனுப்பப்படவில்லை. திடீரென்று கேட்டிருக்கிறார்கள். செய்தியை சேகரித்து, இந்த அவைக்கு நான் தெரிவிப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

(ஆ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, தங்களுக்கு உதவக்கூடிய நோக்கத்திலே தான் சொல்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஓர் அறிக்கையினை வைக்க இருக்கின்றார்கள். அந்த அறிக்கை சட்டமன்ற மேலவையிலே வைக்கப்பட்டு பத்திரிகைகளிலே கூட வந்துவிட்டது. ஆகவே, அதற்குப் பிறகு இங்கே வைத்து சபையின் நேரத்தை வீணாக்குவது நல்லதாக இருக்காது. ஆகவே, புதிய அறிக்கையாக இருந்தால் அதனை இங்கே அவர்கள் வைக்கட்டும் என்கின்ற ஆலோசனையைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

(இ) பேரவைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து.

* திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு நோட்டீஸ் ஃபார் ரெமூவல் ஆப் தி ஸ்பீக்கர் கொடுத்திருக்கிறேன். சட்டப்படி 14 நாட்கள் ஆகிய பிறகு தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டத்திலே விதி இருக்கின்றது. ஆனால் நாளைய்தினம் நம்முடைய சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடர் முடியப்போகிறது. முதல் தேதி கொடுத்தால் 15ஆம் தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது விதி. ஆகவே 15ஆம் தேதி சட்டமன்றம் கூடுமா, அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய முதல் வாதம்.